**செய்தி வெளியீடு எண்:112** **நாள்:20.05.2021**

**செய்தி வெளியீடு**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (20.5.2021) திருப்பூர் மாவட்டம், நேதாஜி ஜவுளிப் பூங்காவில், 18 முதல் 44 வயரை வரை உள்ள பயனாளிகளுக்கு கொரோனா தடுப்பூசி முகாமினை தொடங்கி வைத்தார்.**

திருப்பூர் மாவட்டத்தில் கொரோனா நோய் தாக்குதலை கட்டுப்படுத்தும் வகையில் அரசு வழிகாட்டுதல்கள்படி கடந்த 16.01.2021 அன்று கொரோனா தடுப்பூசி செலுத்தும் பணி தொடங்கப்பட்டது. முதற்கட்டமாக 23,565 முன்களப் பணியாளர்கள் மற்றும் 16,106 சுகாதார பணியாளர்கள் ஆகியோருக்கு கொரோனா தடுப்பூசி செலுத்தப்பட்டது. 01.03.2021 முதல் 60 வயதிற்கு மேற்பட்டவர்கள் மற்றும் 45 வயது முதல் 59 வயது வரையிலான இணைநோய் உள்ளவர்களுக்கும் கொரோனா தடுப்பூசி செலுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து, 45 வயதிற்கு மேற்பட்ட அனைவருக்கும் கொரோனா தடுப்பூசி செலுத்தும் பணி 01.04.2021 முதல் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இதனையடுத்து, 18 முதல் 44 வயது வரை உள்ளவர்களுக்கு தடுப்பூசி செலுத்துவதற்கான திட்டத்தை மாநில அரசுகளே செயல்படுத்த வேண்டும் என்ற மத்திய அரசின் முடிவையொட்டி, மத்திய அரசு ஒதுக்கீட்டின் கீழ், மாநில அரசுகள் வாங்கும் முறையின் அடிப்படையில் 1.5 கோடி தடுப்பூசிகளையும், உலகளாவிய ஒப்பந்தப்புள்ளி மூலமாக 3.5 கோடி தடுப்பூசிகளையும் வாங்கிட அனைத்து முயற்சிகளையும் அரசு எடுத்து வருகிறது. மேலும், இந்த வயதிற்குட்பட்டவர்கள் அனைவரும் பல்வேறு பணிகளில் ஈடுபட்டு நமது பொருளாதாரத்தின் முதுகெலும்பாகத் திகழ்வதால், இத்திட்டத்தின் முதற்கட்டத்தில், அதிக தொற்று பாதிப்பு அபாயம் (High Risk) உள்ளவர்களுக்கும், தொழிற்சாலைகளில் பணிபுரிவோருக்கும் (Industrial workers) தடுப்பூசி செலுத்திட, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

இதன்படி, 18 முதல் 44 வயது வரை உள்ள அனைவருக்கும் இலவசமாக தடுப்பூசி செலுத்தும் பணியினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் இன்று (20.5.2021) திருப்பூர் மாவட்டம், நேதாஜி ஜவுளிப் பூங்காவில் தொடங்கி வைத்தார். மேலும், தடுப்பூசி செலுத்திக் கொண்டவர்களுக்கு சான்றிதழ்களையும் வழங்கினார். இப்பூங்காவில் 12,000 தொழிலாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். இவர்களில் தகுதியுள்ளோர் அனைவருக்கும் தடுப்பூசி அளிக்கப்படும்.

இந்த நிகழ்வின்போது, மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர் திரு. சு. முத்துசாமி, மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் திரு. மு.பெ. சாமிநாதன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் திரு. வி. செந்தில் பாலாஜி, மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் திருமதி. என். கயல்விழி செல்வராஜ், நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள், திருப்பூர் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் க. விஜயகார்த்திகேயன், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

* * * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**